23-05-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : மருத்துவ ஒழுக்கவியல்**

**தொடக்கவுரையாடல் : திரு. இராஜரட்ணம்**

மருத்துவத்துடன் தொடர்புடைய ஒழுக்கப்பெறுமானங்களையும் தீர்ப்புக்களையும் ஆய்வு செய்யும் ஒரு பிரிவே மருத்துவ ஒழுக்கவியல் எனலாம்.

மருத்துவ ஒழுக்கவியல் பிரயோக ஒழுக்கவியலில் ஒரு பகுதியாக அமைந்த போதும் அது உயிரியல், தொழில் நுட்பவியல், விஞ்ஞான மொய்யியல், சமூகவியல் போன்ற பாடப் பரப்புக்களுடனும் தொடர்புடையது. அனேகமான மருத்துவர்கள் நோயாளிக்கு சிகிச்சை வழங்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். மருத்துவத்தையும் அது சார்ந்த தொழிலையும் மையப்படுத்தி வளர்ந்து வரும் சமூக, ஒழுக்க, மெய்யியல் பிரச்சினைகளில் அக்கறை அற்றவர்களாக இருக்கின்றனர். உண்மையில் இவற்றில் அக்கறையும் ஈடுபாட்டும் உள்ள ஒரு மருத்துவரால் மட்டுமே ஒழுக்கப் பெறுமானங்கள் மருத்துவத்தின் மையமாக உள்ளது என்பதை உணரமுடியும்.

மருத்துவப் பணியாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கப் பிரமாணங்களுக்கு உட்பட்டு நோயாளர்களுடன் ஏற்படுத்தும் தொடர்புகள் சுமூகமாக இருந்தால் ஒழுக்கச் சிக்கல்கள் ஏற்படாது. முரண் தோன்றுமாயினும் அவ்விடத்தில்தான் மருத்துவர் ஒழுக்கப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது

**மருத்துவ ஒழுக்கப் பிரமாணங்கள்**

1. பபிலோனியாவின் ஹமுறாபிக் பிரமாணம்
2. கிப்பொக் கிரட்டிசின் சத்தியப் பிரமாணம் (கி. மு 4ம் நூற்றாண்டு)
3. ஜெனீவா உடன்படிக்கைச் சாசனம் (1949)
4. சர்வதேச தாதியர் சங்கம் (1953)
5. அமெரிக்க மருத்துவர் சபை

இப்பிரமாணங்களுக்கு மருத்துவர்கள் கட்டுப்பட்டே தமது பணிகளை செய்ய வேண்டும்.

அனேகமான மருத்துவர்கள் நோயாளிக்கு சிகிச்சை வழங்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். மருத்துவத்தையும் அது சார்ந்த தொழிலையும் மையப்படுத்தி வளர்ந்து வரும் சமூக, ஒழுக்க, மெய்யியல் பிரச்சினைகளில் அக்கறை அற்றவர்களாக இருக்கின்றனர். உண்மையில் இவற்றில் அக்கறையும் ஈடுபாட்டும் உள்ள ஒரு மருத்துவரால் மட்டுமே ஒழுக்கப் பெறுமானங்கள் மருத்துவத்தின் மையமாக உள்ளது என்பதை உணரமுடியும்.

சமகாலத்தில் மருத்துவத்துறை எதிரிநோக்கும் நெருக்கடிகள், புதிய சவால்கள் தொடர்பாக ஒழுக்க மெய்யியல் அடிப்படையில் மறுவிசாரணை செய்யும் போக்கு வளர்ச்சியடைந்து வருகின்றது. இது பற்றி அறிவதற்கு

1. போல் பெயராபென் எழுதிய Aginst Method, Science in free society, Farewell to reason, Philosophcal papers
2. ஐய்வின் இலிங் எழுதிய Desholing society; madica; nemesis
3. Thomas-A Mappes, Dacid Segrazia ஆகியோர் எழுதிய Bio Medical ethics

போன்ற நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உதவும்.


மருத்துவர்களின் வர்த்தக நோக்கம் அவர்கள் பற்றிப்பல எதிர்மறையான விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது. மனிதரின் நீடித்த வாழ்க்கைக்கும், சந்தோசம் உடல் ஆரோக்கியம் நலன் என்பவற்றுக்குப் பாடுபட வேண்டிய மருத்துவர்கள் இவற்றைவிடுத்து இலாப நோக்கை மட்டும் கொண்டு நோயாளியை ஒரு பொருள்/விற்பனைப் பண்டமாகப் பார்க்கும் போக்கு இன்று முனைப்படைந்துள்ளது.

Erich Formm என்பவர் "மனிதன் ஒரு பண்டமல்ல அவனை நீ பண்டமாக மாற்ற முனைந்தால் அவனுக்கு தீங்கு செய்கிறாய்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

விடுதலைப் போராட்டத்தில் வன்முறையின் வகிபாகம்
23-05-2013



ஓமர் கய்யாம்

**கியாஸ் ஒத்-தீன் அபொல்-ஃபத் ஓமர் இபின் எப்ராகிம் கய்யாம் நேஷபூரி (பிறப்பு நேஷபூர், பாரசீகம், மே 18, 1048, இறப்பு டிசம்பர் 4, 1122)**

ஒரு பாரசீகக் கவிஞரும், கணிதவியலாளரும், மெய்யியலாளரும், வானியலாளரும் ஆவார். இவர் ஓமர் அல் கய்யாமி எனவும் அழைக்கப்படுகிறார். இவர் அவரது கவிதைகளுக்காகவே கூடுதலாக அறியப்படுகிறார். இயற்கணிதப் புதிர்கள் தொடர்பான செயல்விளக்கம் குறித்த ஆய்வுக்கட்டுரை (Treatise on Demonstration of Problems of Algebra), கணிதவியலில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகளில் ஒன்றாகும். இதில் முப்படிச் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கான வடிவவியல் முறை ஒன்றைக் கொடுத்துள்ளார். காலக்கணிப்பு முறையின் மேம்பாட்டுக்கும் இவர் பங்களிப்புச் செய்துள்ளார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

செய்திமடல் - 103 | 30-05-2013

## மருத்துவ ஒழுக்கவியல்

முன்பக்கத் தொடர்ச்சி..

நோயாளியின் நோய் நீக்கச் செயற்பாட்டில் அவன் நோயாளியாகவோ மனிதனாகவோ நடாத்தப்படுவதில்லை என்பதிலிருந்தே அவர்களுக்குரிய ஒழுக்கப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

மருத்துவர்கள் புதிய நோய்களைத் தோற்றுவிக்கின்றார்கள் என்ற ஒரு கருத்தும் உள்ளது. இன்று பயன்பாட்டில் உள்ள மருந்துகள் உணவோடு சேரும் போது நஞ்சாக மாறுகின்றது இவ்விடத்தில்தான் மருத்துவர்களின் மர்ம நடவடிக்கைகள் தோன்றுகின்றன. மருத்துவர்களிடம் காணப்படும் கருணையின்மையும் கவனக்குறைவும் திறமையீனமும் புதிய நோய்களைத் தோற்றுவிக்கின்றன. நோயாளிகளின் பொருளாதார நிலையை வைத்தும் சில மருத்துவர்கள் புதிய நோய்களைத் தோற்றுவிக்கின்றனர்.

மருத்துவர் வழங்கும் சிகிச்சை முறைகளால் நோவை/வலியைத்தாங்கும் ஆற்றலும் நோயாளியின் மனோநிலையும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. சிகிச்சை முறையில் உள்ள கவனக்குறைவு, குறைபாடுகள் உளவியல் நோய்கள் ஏற்படுவதற்கும், திட்டமிடப்படாத மருந்துப் பாவனைக்கும் அங்கக் குறைபாடுகளுக்கும் வழிவகுக்கின்றது.

மருத்துவத் தொழில் நோயாளி என்ற மனிதன் மீதே கட்டமைக்கப் பட்டுள்ளது. இதனால் நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையே நிலவவேண்டிய தொடர்பு முக்கியமானது.

* மருத்துவர் இயற்கை விஞ்ஞான முறைகளை மட்டும் பின்பற்றாது மனித விஞ்ஞானப் பண்புகளையும் அறிந்து (அன்பு, இரக்கம், மனிதாபிமானம்) நோயாளிகளுடன் தமது தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.
* நோயாளிகளுக்கும் சில உரிமைகள் உண்டு என்பதை மருத்துவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.
* இன்று மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படும் உயர் தொழில் நுட்பங்களும் கருவிகளும் நோயாளிகளுக்கும் மருத்துவருக்கும் உள்ள உறவைப் பாதிக்கின்றது.

மருத்துவப் பணியாளர்களின் கவனக்குறைவே நோயாளியின் (Medical Care) என்பதைப் பாதிக்கின்றது. இது இன்று உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் சுகப்படுத்தல் மூலம் செய்யப்படும் சேவை கவனக்குறைவினாலும் ஏனைய செயற்பாடுகளினாலும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

* தாதியர்கள் மருத்துவர்களுக்கு சிகிச்சை முறைகளை அமுல்ப்படுத்தல், நோயாளி விடயத்தில் தீர்மானமெடுக்கும் அரிதான வாய்ப்பு, மருத்துவர்களின் நேரடித் துணையாட்களாகத் தொழிற்படல் போன்ற பணிகளைச் செய்யும் போது ஓரளவு அதிகாரத்தைப் பெறுகின்றனர். இவ்வதிகாரத்தை வேண்டுமென்றோ அல்லது அறியாமலோ துஸ்பிரயோகம் செய்யும் போது ஒழுக்கமீறல்கள் நடைபெறுகின்றன. பொருந்தாத வேளையில் பொருந்தாத மருந்து வழங்குதல், காலதாமதமாக செயற்படுதல், மனதைப் புண்படுத்தும் வார்த்தைப் பிரயோகம் போன்றவை மருத்துவத்தில் பலத்த விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது.

கவனக் குறைவு தொடர்பாக பல மருத்துவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு
* சிகிச்சைகளின் போது ஏற்படும் கவனக் குறைவு தம்மிடம் மனஉளைச்சல், மனஅழுத்தம், நித்திரையின்மை போன்றவற்றைத் தோற்றுவிக்கின்றது.
* தமது சிகிச்சை முறைகளில் நம்பிக்கைக்குறைவு ஏற்படுவதை நாம் உணர்கிறோம் இதனால் ஏற்படும் தொழில் அழுத்தத்தினால் தொழிலையே இராஜினாமா செய்கின்றனர்.
* கவனக்குறைவைத் தவிர்ப்பதற்குரிய வாய்ப்புக்களையும் வளங்களையும் தாம் தொழில்செய்யும் நிறுவனங்கள் வழங்குவதில்லை.
* ஏனைய மருத்துவ நிபுணர்களின் உதவியையும் ஆலோசனையையும் பெறுவதற்கு நாம் தயாராக உள்ளோம்.
* உயிராபத்தை விளைவிக்கக்கூடிய அல்லது நிரந்தர பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தவறுகளைத்தாம் நிகழ்த்தியுள்ளோம் என்பதை சிகிச்சைக்குப்பின் அறிந்துள்ளோம்.

மருத்துவர்கள் ஞாபகமறதியினால் மருந்தை மாறி எழுதுதல், குணம்குறிகளை வைத்து தவறாக நோய்களை இனம் கண்டு சிகிச்சை வழங்குதல், நோயாளிகள் பொய்கூறுவதால் தவறான மருந்து வழங்குதல், கையெழுத்து தெளிவின்மை போன்ற மருத்துவத் தவறுகளினால் உலகில் வருடாவருடம் பலர் உயிரிழப்பதுடன் பல துன்பங்களையும் அனுபவிக்கின்றனர். கவனயீனத் தவறுகளை செய்யும் மருத்துவர்கள் நோயாளிகளிடம் மன்னிப்புக்கோரவேண்டும், நட்டஈடு வழங்கவேண்டும் எனவும் பலர் கூறுவதுடன் மருத்துவர்களின் பக்கம் நின்றும் சிந்திக்க வேண்டும்.

மருத்துவத் தொழிலில் ஒழுக்கப் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் இடமாக கருக்கலைப்பு, கருணைக்கொலை, செயற்கை சினைப்படுத்தல் ஆகியனவும் உள்ளன.

**கருக்கலைப்பு :-**

ஒரு கரு வளர்ச்சியுற்று இயற்கையாக தாயிலிருந்து வெளிவருமுன்னரே அதனை கருநிலையில் திட்டமிட்டு அழிப்பது கருக்கலைப்பு எனப்படும்.

பிள்ளைப் பேற்றைத் தள்ளிப் போடுதல், கல்வி/தொழில் இடையூறு, பொருளாதார நிலை, சுகநலத்திற்குப் பாதகம், வன்கலவி, சமூகத்தால் பாலுறவுக்குத் தடைசெய்யப்பட்டவர்களுடன் ஏற்படும் உடல் உறவு ஆகியவற்றால் கருக்கலைப்பு நடைபெறுகின்றது.

கருக்கலைப்பு இருவிதமான ஒழுக்கப் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது.
1. கருக்கலைப்பு ஓர் உயிர்க்கொலை
2. கருக்கலைப்பு பெண்களின் உரிமை

* நான் கருவைச் சிதைக்கமாட்டேன் என மருத்துவர் சத்தியப் பிரமாணம் எடுக்கும் போது அவர் கருக்கலைப்பு செய்யலாமா?
* தாயின் உயிருக்கு ஆபத்தான நிலையில் கருக்கலைப்பை செய்யலாம்.
* வாழும் உரிமை கர்ப்பச்சிசுவுக்கும் உண்டு அதனை அழிப்பது குற்றம்.

**கருணைக் கொலை:-**

தாங்கமுடியாத நோயினால் துன்புறுவோரை செயற்கை முறையில் மரணமடையச் செய்வது கருணைக் கொலை எனலாம்.

மருத்துவர்கள் "மரணத்தை ஏற்படுத்தக் கூடிய விசமருந்துகளை நோயாளி விரும்பினாலும் கொடுக்கவோ ஆலோசனை வழங்கவோ மாட்டேன்" என சத்தியப் பிரமாணம் செய்கின்றனர். எனவே அவர்கள் கருணைக்கொலை செய்வது ஒழுக்கரீதியாக ஏற்கலாமா?

### விடுதலைப் போராட்டங்களில் வன்முறையின் வகிபாகம்
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

1. விடுதலைப் போராட்டங்கள் என்றால் என்ன?
2. வன்முறையின் பயன்பாட்டு வரையறை
3. காலனியாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் வன்முறையின் வகிபாகம்
4. விடுதலைப் போராட்டத்தில் வன்முறை பற்றி பனானும் அமில்கர் கப்ரலும்
5. அரச வன்முறையின் எதிர்ப்புவடிவமாக வன்முறை
6. புதிய உலக ஒழுங்கில் வன்முறை பயங்கரவாதமாதலும் அதன் அரசியலும்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA